ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 2.3 – போய்ப்பாடு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.3 – போய்ப்பாடு

‡ போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான் ⋆
பொரு திறல் கஞ்சன் கடியன் ⋆
காப்பாரும் இல்லை கடல்வண்ணா ⋆
உன்னைத் தனியே போய் எங்கும் திரிதி ⋆
பேய்ப்பால் முலை உண்ட பித்தனே ! ⋆
கேசவ நம்பீ ! உன்னைக் காது குத்த ⋆
ஆய்ப் பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார் ⋆
அடைக்காய் திருத்தி நான் வைத்தேன் ‖ **2.3.1** ‖

வண்ணப் பவள மருங்கினில் சாத்தி ⋆
மலர்ப்பாதக் கிங்கிணி ஆர்ப்ப ⋆
நண்ணித் தொழும் அவர் சிந்தை பிரியாத ⋆
நாராயணா ! இங்கே வாராய் ⋆
எண்ணற்கரிய பிரானே ⋆
திரியை எரியாமே காதுக்கிடுவன் ⋆
கண்ணுக்கு நன்றும் அழகும் உடைய ⋆
கனகக் கடிப்பும் இவையா ‖ **2.3.2** ‖

வையம் எல்லாம் பெறும் வார் கடல் வாழும் ⋆
மகரக் குழை கொண்டு வைத்தேன் ⋆
வெய்யவே காதில் திரியை இடுவன் ⋆
நீ வேண்டியதெல்லாம் தருவன் ⋆
உய்ய இவ்வாயர் குலத்தினில் தோன்றிய ⋆

ஒண் சுடர் ஆயர் கொழுந்தே ⋆
மையன்மை செய்திள ஆய்ச்சியர் உள்ளத்து ⋆
மாதவனே ! இங்கே வாராய் ‖ **2.3.3** ‖

வண நன்றுடைய வயிரக் கடிப்பிட்டு ⋆
வார் காது தாழப் பெருக்கி ⋆
குண நன்றுடையர் இக்கோபால பிள்ளைகள் ⋆
கோவிந்தா ! நீ சொல்லுக் கொள்ளாய் ⋆
இணை நன்றழகிய இக்கடிப்பிட்டால் ⋆
இனிய பலாப் பழம் தந்து ⋆
சுண நன்றணி முலை உண்ணத் தருவன் நான் ⋆
சோத்தம் பிரான் ! இங்கே வாராய் ‖ **2.3.4** ‖

சோத்தம் பிரான் ! என்றிரந்தாலும் கொள்ளாய் ⋆
சுரி குழலாரொடு நீ போய் ⋆
கோத்துக் குரவை பிணைந்திங்கு வந்தால் ⋆
குணம் கொண்டிடுவனோ நம்பீ ⋆
பேர்த்தும் பெரியன அப்பம் தருவன் ⋆
பிரானே ! திரியிட ஒட்டில் ⋆
வேய்த் தடந் தோளார் விரும்பு கருங்குழல் ⋆
விட்டுவே ! நீ இங்கே வாராய் ‖ **2.3.5** ‖

விண் எல்லாம் கேட்க அழுதிட்டாய் ! ⋆
உன்வாயில் விரும்பி அதனை நான் நோக்கி ⋆
மண் எல்லாம் கண்டென் மனத்துள்ளே அஞ்சி ⋆
மதுசூதனே என்றிருந்தேன் ⋆
புண் ஏதும் இல்லை உன் காதும் அறியும் ⋆
பொறுத்திறைப் போதிரு நம்பீ ! ⋆

கண்ணா ! என் கார் முகிலே ! ⋆
கடல் வண்ணா காவலனே ! முலை உணாயே ॥ **2.3.6** ॥

முலை ஏதும் வேண்டேன் என்றோடி ⋆
நின் காதில் கடிப்பைப் பறித்தெறிந்திட்டு ⋆
மலையை எடுத்து மகிழ்ந்து கல் மாரி காத்துப் ⋆
பசுநிரை மேய்த்தாய் ⋆
சிலை ஒன்றிறுத்தாய் ! திரிவிக்கிரமா ! ⋆
திருவாயர் பாடிப் பிரானே ! ⋆
தலை நிலாப் போதே உன் காதைப் பெருக்காதே ⋆
விட்டிட்டேன் குற்றமே அன்றே ॥ **2.3.7** ॥

என் குற்றமே என்று சொல்லவும் வேண்டா காண் ⋆
என்னை நான் மண் உண்டேனாக ⋆
அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும் ⋆
அனைவர்க்கும் காட்டிற்றிலையே ⋆
வன் புற்றரவின் பகைக் கொடி ⋆
வாமன நம்பீ ! உன் காதுகள் தூரும் ⋆
துன்புற்றன எல்லாம் தீர்ப்பாய் பிரானே ! ⋆
திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே ॥ **2.3.8** ॥

மெய் என்று சொல்லுவார் சொல்லைக் கருதித் ⋆
தொடுப்புண்டாய் வெண்ணெயை என்று ⋆
கையைப் பிடித்துக் கரை உரலோடென்னைக் ⋆
காணவே கட்டிற்றிலையே ⋆
செய்தன சொல்லிச் சிரித்தங்கிருக்கில் ⋆
சிரீதரா ! உன் காது தூரும் ⋆

கையில் திரியை இடுகிடாய் ⋆
இந்நின்ற காரிகையார் சிரியாமே ‖ **2.3.9** ‖

காரிகையார்க்கும் உனக்கும் இழுக்குற்றென் ⋆
காதுகள் வீங்கி எறியில் ⋆
தாரியா தாகில் தலை நொந்திடும் என்று ⋆
விட்டிட்டேன் குற்றமே அன்றே ⋆
சேரியிற் பிள்ளைகள் எல்லாரும் ⋆
காது பெருக்கித் திரியவும் காண்டி ⋆
ஏர் விடை செற்றிளங்கன்றெறிந்திட்ட ⋆
இருடீகேசா ! என்தன் கண்ணே ! ‖ **2.3.10** ‖

கண்ணைக் குளிரக் கலந்தெங்கும் நோக்கிக் ⋆
கடி கமழ் பூங்குழலார்கள் ⋆
எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும் ⋆
பெருமானே ! எங்கள் அமுதே ⋆
உண்ணக் கனிகள் தருவன் ⋆
கடிப்பொன்றும் நோவாமே காதுக்கிடுவன் ⋆
பண்ணைக் கிழியச் சகடம் உதைத்திட்ட ⋆
பற்பநாபா ! இங்கே வாராய் ‖ **2.3.11** ‖

வா என்று சொல்லி என் கையைப் பிடித்து ⋆
வலியவே காதில் கடிப்பை ⋆
நோவத் திரிக்கில் உனக்கிங்கிழுக்குற்றென் ⋆
காதுகள் நொந்திடும் கில்லேன் ⋆
நாவற் பழம் கொண்டு வைத்தேன் ⋆
இவை ஆணாய் நம்பீ ⋆

முன் வஞ்ச மகளைச் சாவப் பால் உண்டு சகடிறப் பாய்ந்திட்ட ⋆
தாமோதரா ! இங்கே வாராய் ‖ **2.3.12** ‖

‡ வார் காது தாழப் பெருக்கி அமைத்து ⋆
மகரக் குழையிட வேண்டிச் ⋆
சீரால் அசோதை திருமாலைச் சொன்ன சொல் ⋆
சிந்தையுள் நின்று திகழப் ⋆
பார் ஆர் தொல் புகழான் புதுவை மன்னன் ⋆
பன்னிரு நாமத்தால் சொன்ன ⋆
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார் ⋆
அச்சுதனுக்கடியாரே ‖ **2.3.13** ‖

அடிவரவு — போய்ப்பாடு வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலை என்குற்றம் மெய் காரிகையார்க்கும் கண்ணை வாவென்று வார்காது வெண்ணெயளைந்த

போய்ப்பாடு முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்